# திருமுறைகள் சுட்டும் இசைக்குறிப்புக்கள்
## சமய இசையியல் ஆய்வு

அ. சுகன்யா

**ஆய்வுச் சுருக்கம்**

*சைவ சமய மரபிலே கலைகளும் சமயமும் மிகவும் இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருப்பதை வரலாறுகள் வாயிலாக தெரிந்து கொள்கின்றோம். காலங்காலமாக நிகழ்ந்து வரும் சமய மறுமலர்ச்சியிலே எல்லாப்படிமுறைகளிலும் சைவமும் கலையும் ஒன்றில்ஒன்று சார்ந்து வளர்ந்திருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையிலே சைவத்தின் பொக்கிஷமாகத்திகழ்கின்ற திருமுறைகளிலே கலைகளுள் முதன்மையாக வைத்தெண்ணப்படும் இசை சார்ந்தகுறிப்புக்களை இனங்கண்டு வெளிப்படுத்தும் நோக்கிலே இவ்வாய்வுக்கட்டுரை தொடர்கின்றது.*

**திறவுசொற்கள் :** பண், கானகாலம், இசைரூபம், இசைக்கருவிகள், இசையனுபவம்.

**அறிமுகம்**

தமிழ் மரபிலே தேவாரங்கள் தெய்வம் சுட்டிய வாரப்பாடல்கள் என வழங்கப் படுகின்றன. இயல், இசைத் தமிழ்ப்பாடலாகிய தேவாரத்திருப்பதிகங்கள் பக்தியிலும் சித்தாந்தத்திலும்சிறந்து விளங்கும்அதேவேளை தமிழிசை, மற்றும் இசைசார் வடிவங்கள், அவை பற்றிய நுணுக்கங்கள் என்பன பற்றியும் மிகத் தெளிவான விளக்கங்களைத் தருவன வாகவும் அமைகின்றன. தேவார முதலிகள் தமது பதிகங்கள் தோறும் இறையின் அற்பு தங்களை எடுத்தியம்பும் அதேவேளை இறைவன் உறைந்திருக்கும் ஊர், அதன் சிறப்பு, இறைவன் பெயர், புராண வரலாறுகள், போன்றவற்றையும் விபரிப்பதோடு 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனும் வாக்கிற்கமைய தமிழிசையையும் இணைத்து இறையியலுடன் பரப்பினார்கள் என்பதில் கருத்து மாற்றம் இல்லை. இத் தெய்வீகப்பாடல்கள், இசையிலக்கணங் களை முற்றும் அறிந்து, இசை நயத்தோடு தாளக் கூறுகளையமைத்து, எல்லையற்ற கற்பனை நயத்துடன் பாடக்கூடியவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பண்ணியல் வரன்முறைகளுக்கமையவும், இசையியலிலே வரையறுக்கப்பட்டிருக்கும் கான கால வரன் முறைகளுக்கு ஏற்பவும், இத் தேவாரத்தின் இசையியல் மரபானது வகுக்கப்பட்டுள்ளமை நுணுகிப்பார்க்கும் போது தெளிவாகின்றது. (கர்நாடக இசையியலாளர்கள் இராகங் களை அவற்றின் தன்மைக்கேற்ப பாடப்பட வேண்டிய காலங்கள் குறித்து வரையறை செய்திருக்கின்றார்கள். இது இந்த இராகத்தின் கானகாலம் எனப்படும்.)[1]

ஏழிசையாய் இசைப்பயனாய் நிற்கும் இறைவனோடு லயப்படுவதற்கு இசை பெரிதும் பயன்படுவதை நம் முன்னோர்கள் அனுபவித்து அறிந்திருந்தார்கள். இடமும் காலமும் இசையும் மனித உள்ளத்தில் என்னென்ன உணர்ச்சிகளை ஏற்படுத்தும் என்பதை நம் முன்னேர்கள் பல ஆண்டுகளாக அனுபவித்தறிந்து, எந்தக் காலத்திற்கு எந்த இசை, எந்த ராகம் என்று வரையறைப்படுத்தினார்களோ அதைத்தான்

BA. ,BFA., MFA. விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம். saravinthon@hotmail.com

நமது கோயில்கள் இன்றும் போற்றி வருகின்றன.[2] இந்த உண்மைகளை நமது ஆகமங்களிலும் காணமுடிகின்றது.

திருமுறைகளைப் பொறுத்தவரையிலே இதனை யாத்தவர்கள் இறைவனை இசையால் வழிபட்டிருக்கின்றார்கள், இறைவனையே இசையாகக்கண்டு அனுபவித்திருக்கின்றார்கள். இது மட்டுமல்லாமல் இசையியல் பண்புகளையும், நுணுக்கங்களையும் விளக்கி நிற்கின்ற ஒரு இசையியல் பொக்கிஷமாகவும் இத்திருமுறைகளை நோக்க முடியும். இந்த வகையிலே தேவாரம் பாடிய நாயனமார்கள் இசையால் இறைவனைத் துதிக்குமாற்றினையும், அவர்களால் விளக்கப்பட்ட இசையிலக்கணங்கள் பற்றியும், இசைக்குறிப்புக்கள் பற்றியும் குறிப்பாக நோக்குவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமையும்.

மேற்குறிப்பிட்ட இசையியல் சார் பகுதிகளை இனம் கண்டு வெளிப்படுத்தி நிற்கும் முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது. மேலும் நாயன்மார்கள் இசையியலை எவ்வாறெல்லாம் கையாண்டிருக்கின்றார் என்பதனை ஒவ்வொரு திருமுறைகளாக விரித்து ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு முன்னாய்வாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடில்லை.

**இந்து மதத்தில் இசை.**

இந்துக்கள் இறைவனை வழிபடுவதற்குப் பல வழிமுறைகளைக் கைக்கொண்டாலும் இறைவனுக்குப் பிடித்ததும், இலகுவானதும் ‘அவன் புகழ் பாடுவதாகும்’. இசையால் இறைவனையே வசப்படுத்தமுடியும் என உணர்ந்து இசையால் இறைவனைப் பாடிப் பரகதி பெற்ற பலரை சைவ வரலாற்றிலே கண்டுகொள்ள முடிகின்றது.

இவ்வாறு இறைவனைப் போற்றிப் பாடும் போது இந்த இசையை பல வழிகளிலே இறைவனோடு தொடர்புபடுத்தி இருப்பதை இவர்களது பாடல் வரிகள் மூலமாக இனம் கண்டுகொள்ளமுடிகின்றது. இந்த வகையிலே இவ்வழிமுறைகளை மூன்று விதமாக வகுக்கலாம்.

1. இறைவனையே இசைக்கலைஞனாகக்கண்டு அதாவது இசை ரூபமாக இறைவனைக் கண்டின்புற்றிருக்கின்றார்கள்.
2. இசை பாடி அல்லும் பகலும் வழிபாடியற்றி இறைவனைத் தொழுது பாடியிருக்கின்றார்கள்.
3. பண்ணோடு இசைக்கலையின் சிறப்பு, இசைக்கருவிகள் இதன் பண்புகள், சப்த ஸ்வரங்கள் பற்றிய குறிப்புக்களையெல்லாம் இந்த திருமுறைகளிலே கண்டுகொள்ள முடிகின்றது.

**இசை ரூபமாகவே இறைவனைக் கண்டு இன்புற்றுப் பாடுதல்**

திருமுறை தந்த நாயனமார்களுள் இந்த உண்மையைப் புலப்படுத்தி நிற்பதிலே முக்கியமாக உமையம்மையிடம் ஞானப் பாலுண்டு திருஞானம் கைவரப்பெற்ற திருக்குழந்தை திருஞானசம்பந்தரைக் குறிப்பிட முடியும். அவரது திருமுறைகளிலே,

**பண்- சீகாமரம்**

‘கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடகாட்டுங் கொடியானே’[3]

என்கின்ற தேவாரம், மற்றும், பண் சாதாரியிலே அமைந்த,

‘கண்ணின்மிசை நண்ணியிழிவிப்ப முகமேத்து
கமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட ஆடவல
பால் மதியினான்..’ [4]

போன்ற தேவார வரிகளும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். அதாவது பண்ணினை

உருவாக்குபவன் இறைவனே என்று ஞானக் குழந்தை குறிப்பிட்டு நிற்கின்றார்.

மேலும் திருநாவுக்கரசரது தேவாரங்களிலும் பரம்பொருளைப் பண்ணாகப் பார்க்கும் நிலைகளைக் கண்டுகொள்ள முடிகின்றது.

பண் பழந்தக்கராகத்திலே பாடியுள்ள,

'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ் விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலுமுண் டிகழ்வானோ'[5]

என்கின்ற திருப்பழனநாதரை நோக்கிப்பாடிய பதிகத்திலே 'பண் மிழற்றும் பழனத்தான்' என்கின்ற பதம் இறைவன் பண்பாடுபவனாகக் குறித்துப் பாடியிருக்கின்றார்.

மேலும்,

'தாடவுடுக்கையன் தாமரைப்பூஞ் சேவடியன்
கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினான்
ஆடரவக் கிண்கிணிக்கால் அன்னனோர் சேடனை
ஆடுந் தீக் கூத்தனை நான்கண்ட தாரூரே'[6]

என்கின்ற பதிகமும் சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளமுடியும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பதிகங்களிலேயும் இத்தகைய குறிப்புக்களைக் கண்டு கொள்ள முடிகின்றது.

'காதலா லேகருதுந் தொண்டர்
காரணத்தீராகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம்
புவனியேத்த ஆடவல்லீர்
நீதியாக ஏழிலோசை
நித்தராகிச் சித்தர் சூழ
வேதமோதித் திரிவதென்னே
வேலை சூழ் வெண்காடனீரே'[7]

என்கின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது பாடல் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக நோக்கலாம்.

இசையாக இறைவனைப் போற்றி ஏனைய நாயன்மார்கள் பாடியிருப்பினும் குறிப்பாக பதினோராம் திருமுறையிலே திருவாலவாயுடையார் அருளிச்செய்த திருமுகப்பாசுரத்திலே,

'பண்பாலி யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்'[8]

என்று குறிப்பிடுவதும் இறைவனை இசையாகவே போற்றிப்பாடியதைப் பார்க்க முடிகின்றது.

மேலும் பதினொராம் திருமுறையிலே அடங்குகின்ற கபில தேவநாயனார் அவர்கள் பாடிய சிவபெருமான் கட்டளைக்கலித்துறை திருவிரட்டை மணிமாலையிலே,

'இயலிசை நாடக மாய்எழு வேலைக ளாய் வழுவாப்
புயலியல் விண்ணோடு மண்முழு தாய் பொழுதாகி
நின்ற'[9] இறைவனே இயல் இசை நாடகமாகி நிற்கின்றார் என்று குறிப்பிடுகின்றார்.

கபிலரே பாடியருளி சிவபெருமான் திருவந்தாதியிலே,

'கலைகாமின் ஏர்காமின் கைவளைகள் காமின்
கலைசேர் நுதலீர் நாண் காமின் – கலையாய
ஷபான்மதியன் பண்டரங்கன் பாரோம்பு
நான்மறையன்
பான்மதியன் போந்தான் பலிக்கு'[10]

என்கின்ற குறிப்பும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

அதாவது இறைவனது ஒவ்வொரு உறுப்புக்களும் கலையாகவே திகழ்கின்றது, கலையே வடிவானவன் இறைவன் என்கின்ற பொருள்பட கபிலர் அவர்கள் தனது திருவிரட்டை மணிமாலையிலே குறிப்பிட்டு பாடிநிற்கின்றார்.

அடுத்து இதே திருமுறைப்பகுப்பிலே வருகின்ற பரணதேவ நாயனார் அவர்கள் அருளிய சிவபெருமான் திருவந்தாதியிலே,

'பண்ணாகப் பாடி பலிகொண்டாய் பாரேழும்
பண்ணாகச் செய்த பரஞ்சோதி – பண்ணா
எருதேறி யூர்வாய் எழில்வஞ்சி எங்கள்
எருதேறி யூர்வாய் இடம்'[11]

என்கின்ற குறிப்பும் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். அதாவது இறைவனைப் 'பண்ணா' என்று விழித்தழைத்துப் பாடுகின்றார்.

**இசை பாடி அல்லும் பகலும் வழிபாடியற்றித் தொழுது பாடுவது.**

இறைவனை பண்ணால் வழிபட்டுப் போற்றித் துதி செய்தமை பற்றியெல்லாம் நாயன்மார்கள் தமது தேவாரங்களிலே அவ்வப்போது குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

இது பற்றிய குறிப்புக்கள் நாயன்மார்களது தேவாரங்களிலே பரவிக்கிடப்பதைக்காண முடிகின்றது. பண்ணின் இசையாகி நிற்கும் இறைவனைப் பாடும் போது உண்டாகும் இன்பத்தையும், பாடித்துதிப்பதால் வரும் பயன் பற்றியும் நாயன்மார்களது தேவாரங்களிலே ஆங்காங்கே காணலாம்.

இவ்வாறே திருஞானசம்பந்தரது பண் குறிஞ்சியிலமைந்துள்ள,

'விண்ணியல் விமானம் விரும்பிய பெருமான்'

எனத்தொடங்கும் திருப்பிரமபுரப்பதிகத்திலே,

'பண்ணியல் பாகப் பத்திமை யாலே
பாடியு மாடியும் பணியவல்லோர்கள் ......'[12]

என்கின்ற அடிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதாவது பண்ணின் இயல்புகளுக்கேற்ப பாடியும் ஆடியும் போற்றித் துதிசெய்வது பற்றிக்குறிப்பிடப்பட்டிருக்கின்றது.[13]

சிவன் உமையம்மையின் இனிய கீதம் கேட்டு மகிழ்வுற்று திருவையாறெனும் சிவஸ்தலத்தில் எழுந்தருளியுள்ளாரென்று ஞாசம்பந்தர் தேவாரத்தில் கூறுகின்றார்.

**பண்- இந்தளம்**

'பண்ணின் நல்ல மொழியார் பவளத் துவர் வாயினார்
எண்ணின் நல்ல குணத்தாரிணை வேல் வென்ற
கண்ணினார்
வண்ணம்பாடி வலி பாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந் தானும் ஐயாறுடைய ஐயனே'[14]

மேலும்திருநாவுக்கரசரது தேவாரங்களிலும் இவ்வாறே பரம்பொருளைப் பண்கொண்டு பாடித் துதிசெய்யும் வகையினைப் தனது திருமுறைகளிலே பல இடங்களிலே குறிப்பிட்டிருக்கின்றார்.

திருநேரிசையிலே வருகின்ற,

'கண்டவா திரிந்து நாளுங்
கருத்தினால் நின்றான் பாதங்
கொண்டிருந் தாடிப் பாடிக்
கூடுவன் குறிப்பி னாலே
வண்டு பண் பாடுஞ்சோலை
மல்கு சிற் றம்ப லத்தே
எண்டிசை யோரு மேத்த
இறைவ நீ யாடுமாறே'[15] என்றும்,

திருக்குறுந்தொகையிலே,

'பண்ணின் இன்மொழிகேட்கும் பரமனை
வண்ண நன்மல ரான் பல தேவருங்
கண்ண னும்மறி யான்கடம் பத்துறை
நண்ண நம்வினை யாயின நாசமே'[16]

என்கின்ற அடிகளும் கூட பண்ணினால் இறைவனைப்பாடுமாற்றை நமக்குத் தெளிவு படுத்தி நிற்கக் காணமுடிகின்றது.

இதுதவிர பண் கொல்லியிலே திருநாவுக்கரசர் பாடியுள்ள,

'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்...'[17]

என்ற வரிகளும் திருநாவுக்கரசர் தேவாரங்களிலே குறிப்பிட்டுக் கூறத்தக்கனவாக இருக்கின்றன.

இது போலவே சுந்தரமூர்த்தி சுவாமிகளது பதிகங்களிலும் பண்கள் பற்றி குறிப்புக்கள் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

'பண்ணிசை யார்மொழி யார்பலர்பாடப்
புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ...'[18]

'பண்ணார் இயற்றமிழாய்ப் பரமாய தனிச்சுடரே'..[19]

என்றும்,

'பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்திடை
சுவையொப்பாய்'...[20]

போன்ற வரிகளும் சுந்தரர் அவர்கள் தமிழிசையையும் நாத கீதத்தையும் தேவாரங் களிலே போற்றிப்பாடி இருக்கின்மைக்கான சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

இது தவிர திருவிசைப்பா அடங்கிய ஒன்பதாம் திருமுறையிலே திருமளிகைத் தேவநாயனார் அவர்களுடைய திருவிசைப் பாக்களிலே கோயில் - உயர்கொடியாடை என்னும் பகுதியில் வரும் பதினைந்தாவது பாடலான,

'தேர்மலி விழவில் குழலொலி தெருவில்
கூத்தொலி ஏத்தொலி ஒத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நிலவு இலயத்திருநடத்தியல்
திகழ்ந்த சிற்றம்பலக்கூத்தா!
வார்மலி முலையாள வருடிய திரள்மா
மணிக்குறங்கு அடைந்தென்மதயே'[21]

என்கின்ற திருவிசைப்பாவிலே கூத்தாகிய நடனத்தின் ஒலி, இறைவனை ஏத்திப் போற்றிப் பாடுவோரின் ஒலி, குழலொலி, ஒத்து எனப்படுகின்ற இசைக்கருவியின் ஒலி எனப்பலவும் இசைப்பதைக் குறிப்பிட்டு நிற்கின்றார்.

இவைதவிர பதினான்றாம் திருமுறையிலே அடங்குகின்ற சேரமான் பெருமாள் நாயனாரது பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை மற்றும் திருக்கைலாய ஞான உலா என்கின்ற மூன்றினுள்ளும் திருக்கைலாய ஞான உலாவிலே இறைவனது உலா மிகவும் சிறப்பாக எடுத்துக்கூறியிருககின்றார். இங்கே இசையூடான போற்றுதல் மிகமுக்கிய இடம் பெற்றிருப்பதை இவரது பாடல் வரிகள் எமக்கு நன்குணர்த்தி நிற்கின்றன.

'பன்னிருவர் ஆதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப
மன்னும் அகத்தியர் யாழ் வாசிப்ப...
'மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்ப'...[22]

இவ்வாறு நிருதி, வருணன், வாயு, சோமன், ஈசான், அச்சுனிகள், உருத்திரன் எனப்பலருக்கும் பலவாறான பொறுப்புக்கள் வகுக்கப்பட்டிருந்தன.

'மேகம் மின்னலானாள் சூழ் கொடியாய்
மேகத் துருமு முரசறைய-போகஞ்சேர்
தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கோம்புரவ நுண்ணிடையாள் கூத்தாட'[23]

என்றவாறான அடிகள் இறைவனை இன்னிசையால் பாடி வழிபாடியற்றும் முறைக்கு மிகப் பொருத்தமான எடுத்துக்காட் டுக்களாகும்.

**தேவாரத்தில் இசைக்கலையின்சிறப்பு, இசைக் கருவிகள் இதன் பண்புகள், சப்த ஸ்வரங்கள் பற்றிய குறிப்புக்கள்**

தேவாரங்களிலே பண்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவது போல இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்களும் விரவிக்காணப்படுகின்றன. இசை எனப்படுவது மிடற்றிசை, கருவியிசை என இரு பிரிவுகளாக அவை தோன்றும் அடிப் படையிலே பகுத்து நோக்கலாம். மிடற்றினால் தோற்றுவிக்கப்படுவது மிடற்றிசை எனவும் கருவியினால் கருவியிசை எனவும் குறிப் பிடப்படும். இசையின் தோற்ற மூலம் வேறு படினும் இதற்குரிய இயல்பு, பண்பு யாவும் ஒன்றே. இதனை முற்றுமுணர்ந்த நாயன் மார்கள் தமது தேவாரத்திருமுறையிலே இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்களையும் இணைத்துக்கொள்ளத்தவறவில்லை.

திருஞானசம்பந்தருடைய கோளறு பதிகத் திலே,

'வேயிறு தோழி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி'[24] என்ற வரிகளும்,
'தண்டுந் தாளமும் குழலும் தண்ணுமைக்
கருவியும் புறவில்'[25]

என்கின்ற திருவாழ்கொளி புத்தூர் மேற்பாடிய பதிகத்திலே வரும் வரிகளும்,

'மந்தமுழவம் இயம்ப மலைமகள் காண நின்றாடி'[26] என்கின்ற திருவேட்களம் நோக்கிப் பாடிய பதிகத்திலும்,

'குழல் யாழ் மொந்தை கொட்டவே
பறையுங் குழலும் கழலு மார்ப்ப.'[27] என்கின்ற திருவீய்ங்கோய்மலை நோக்கிப்பாடிய பதிகத்தின் அடிகளும்,

'மாந்தர்தம் பால் நறு நெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி'[28] என்கின்ற திருப்பாலாச்சிராமத்துப் பதிகத்திலுள்ள வரிகளும்,

திருஞானசம்பந்தரது தேவாரங்களிலே இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளுக்கு சில எடுத்துக்காட்டுக்களாகும்.

இவரையடுத்து திருநாவுக்கரசர் அவர்களது பதிகங்களுள்ளே,

'கொக்கரை தாளம் வீணை
பாணி செய் குழகர் போலும் ..'[29]
என்றும்,
கொக்கரை குழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆட லுகந்துடன் கூத்தராய்...'[30]

என்றும், இன்னும்பலவாறும்பாடியிருப்பது மிகச்சிறந்த எடுத்துகாட்டுக்களாகும்.

இவ்வாறே ஒன்பதாம் திருமுறையிலே அடங்கும் கருவூர்த்தேவ நாயனார் அவர்களது திருவிசைப்பாவிலே,

'துந்துபி குழல் யாழ் மொந்தைவார் இயம்ப
தொடர்ந்து இருடியர் கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம் புரி பரமர்தம் கோயில்
அந்தியின் மறைநான்கு ஆரணம் பொதிந்த
அரும் பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும் பற்றப்புலியூர்
திருவாரூர் திருச் சிற்றம்பலமே' என்று பாடுகின்றார்.[31] அதாவது இறைவனை வழிபடுவதற்காக முழக்கப்படும் முழவமானது முகில் போல முழங்கியது என்று முழவத்தின் இசையின் சிறப்புப்பற்றி பேசுகின்றார்.

மேலும் கருவூர்த் தேவநாயனார் அவர்கள் 'திருக்கீக்கோட்டுர் மணியம்பலம்' என்கின்ற திருத்தலம் நோக்கிப் பாடும் போது,

'தங்கை மழலை சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீறு
இன்ன கை மழலை கங்கை கொண்டு இதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலை யாழ் வீணை
செழுகவும் பலைசெய் கீழ்க்கோட்டூர்
மன்னவம் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன் என் மனத்துள் வைத்தகனே'[32]

என்று பாடுகின்றார். இறைவணக்கத்துக்காக இசைக்கப்படும் இசைக்கருவிகள் பற்றி இங்கு கூறப்படுகின்றது.

இதுபோலவே ஒன்பதாம் திருமுறையிலே அடங்கும் சேந்தனார் அவர்கள் பாடிய திருப்பல்லாண்டிலே இசைக்குறிப்புக்கள் பலவற்றையும் கண்டுகொள்ள முடியும்.

'குழலொலி யாழொலி கூத்தோலி ஏத்தொலி எங்கும்
குழாம் பெருகி
விழவொலி விண்ணையும் சென்று விம்மி மிகு
திரு ஆரூரின்'[33]

என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது இறைவனை வழிபடுவதற்காக எழுப்பப்படும் இசை ஒலிகள் வானத்தையும் நிறைத்தது என்று குறிப்பிட்டிருப்பது இசையின் சிறப்புப்பற்றிய குறிப்புகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

மற்றும் 'ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்'.. என்று ஆரம்பிக்கும் திருப்பல்லாண்டிலே,

'தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும்
நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே'[34]
என்று பாடியிருக்கின்றார்.

பதினோராம் திருமுறையிலே காரைக் காலம்மையாரது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலே,

'துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி ஓசை
பண் செழுமைப்பாடி
சச்சரி கொக்ரை தக்கையொடு தகுளிதம் துந்துபி
தாளம் வீணை
முத்தளம் கரடிகை வன்கைமென்றோல் தமருகங்
குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோடாடும் எங்கள் அப்பன்
இடந்திரு ஆலங்காடே'[35]

என்று ஏழு இசை ஸ்வரங்கள் பற்றியும் இவற்றின் நிலைகள் பற்றியும், இசை வாத்தி யங்கள் பற்றியுமான விபரங்களை தனது பதிகத்திலே குறிப்பிட்டிருப்பதைக் கண்டு கொள்ளமுடிகின்றது.

மேலும்,

'முந்தி அமரர் முழவின் ஓசை திசைகது வச்சிலம்
பார்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள் அப்பன்
இடந்திரு ஆலங்காடே'[36] என்றும்,
'ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி ஒன்றினை
ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டு பகண்டை யாடப் பாடருந் தந்தரி
யாழ் அமைப்ப
அப்பனை அணி திரு ஆலங்காட்டுன் அடிகள்'[37]
என்றும் பாடியிருக்கின்றார்.

இது போலவே அம்மையாரது மூத்த திருப்பதிகத்திலே,

'பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பாறைபோல
விழி கட்பேய்
கொட்ட முழவம் கூழி பாடக் குழகன் ஆடுமே'[38]
என்றும்,

அதாவது பரமன் ஆடல் செய்யும் ஆலங் காட்டிலுள்ள பேய்களது கண்களை பறை என்கின்ற இசைக்கருவிக்கு அம்மையார் ஒப்பிடுவது இசையின்பால் அவர் கொண்டி ருக்கின்ற ஈடுபாட்டினைக்காட்டி நிற்கின்றது.

'வாளைக் கிளர வளைவாள்..
கூளிகணங்கள் குழலோடியம்பல் குழகன்
ஆடுமே'[39] அதாவது காட்டிலுள்ள கணங்களின் குழலிசைக்கு இறைவன் ஆடுகின்றான் என்றும்,
'முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே'

அதாவது முழவின் ஓசை ஆடலுக்குரிய வரன்முறைகளோடு ஒலிக்க அக்கினியைக் கையிலேந்தி இறைவன் ஆடுகின்றார் என்றும்,

'கடுவன் உகளுங் கழைசூழ்...
கொடு வெண்மரவும் பிறையுந் ததும்பக்
கொள்ளென்றிசைபாடப்
படுவெண்துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே'[40]

அதாவது இறைவன் பறை, துடி என்கின்ற இசைக்கருவிகளது ஓசைக்கேற்ப ஆடுவதாக அம்மையார் இறைவனின் ஆடலை விபரித்து நிற்கின்றார்.

இவ்வாறே பதினொன்றாம் திருமுறையிலே அடங்கும் சேரமான் பெருமாள் நாயனார் அவர்களது திருவிரட்டை மணிமாலையிலே,

'சல்லரி தாளந் தகுணி தந் தத்தளகம்
கல்லகு கல்லவடம் மொந்தை நல்லியத்
தட்டமி சங்கந் சலலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி சுரதாளம் – கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்
இடமாற் தடாரி படகம் – இடவிய
முத்தளந் துந்துபி வாய்த்த முருடிவற்றால்
ஏத்திசை தோறும் எழுந்தியம்ப – ஒத்துடனே
மங்கலம் பாடுவான் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கிரரும் எங்கும் கிலுகிலுப்பத் தங்கிய'[41]

என்று இறைவனது திருவுலாவின் போது அங்கு இறைவனைப் பொற்றிப்பாடுவதற்காக இசைக்கப்பட்ட இசைக்கருவிகள் பற்றி பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதே திருமுறை வகுப்பிலே வரும் நக்கீரதேவ நாயனார் தனது திருஈங்கோய்மலை எழுபதிலே

'கடற்களிறு கண்வளரக் கார்நிற வண்டார்ப்பச்
சுடர்க்குழையார் பாட்டெழவு கேட்டு- மடக்கிளிகள்
கீதந் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆங்கீழ்நால்
வேதந்தெரிந்துரைப்பான் வெற்பு'[42] என்று

இறைவனுக்கும் இசைக்குமுள்ள உறவு பற்றிக்குறிப்பிடுகின்றார்.

இறுதியான 12ம்திருமுறையான சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருப்புராணத்தி லும் நாயன்மாரது இறைசரிதம் பற்றிப் பேசினாலும் இசைக்குறிப்புக்களையும் ஆங்காங்கே கண்டுகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக திருமலைச்சருக்கத்திலே திருமலைச்சிறப்புப்பற்றிப் பேசும்போது,

'மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையின் காரெதிர்
தானமாக்கள் முழக்கமும் தாவில் சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம்....'[43]

என்று இறவனது இருப்பிடத்திலே அவனை ஏத்திப்பாட எழுப்பப்படும் இசை பற்றி விபரிக்கப்படுகின்றது.

மேலும் இறைவனை நாதவடிவானவர் என்பதை பல இடங்களிலே சேக்கிழார் அவர்கள் குறிப்பிடத்தவறவில்லை.

பத்தாம் திருமுறையான திருமூலரின் திருமந்திரத்திலும் இசைக்குறிப்புக்கள் பலவும் விரவிக்கிடக்கின்றன.

'நாதத்தின் விந்தும் நாத விந்துக்களின்
தீதற்றகம் வந்த சிவன் சக்தி எனவே
பேதித்து ஞானங்கிரியை பிறத்தலான்
வாதித்த விச்சையின் வந்தெழும் விந்துவே' [44]

அதாவது ஆரம்பமும் முடிவும் இசையின் நாதமே, அதாவது இறைவன் என்று குறிப் பிடுகின்றார். எதற்கும் இசையே அடிப்படை என்று குறிப்பிடுகின்றார் திருமூலர்.

'நாத முடிவிலே நல்லார் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நங்கண்ட கண்ணே'[45]

என்றும் பாடுகின்றார். நாதத்தில் சிறந்தது வேறொன்றுமில்லை. நாதத்தின் முடிவே சிறந்தது என்கின்றார்.

**நிறைவுரை**

தொகுத்து நோக்கும் போது இறைவனை வணங்கி அதன்வழி அருட்பேறுபெறல் என்பதே நாயன்மாரது ஒரேநோக்காக இருந்தாலும் இறைவன் இசைக்கு இசைபவன் என்கின்ற சைவ சமயக்கோட்பாட்டைப் புரிந்து கொண்டமையால் நாயன்மார்கள் இறைவனைக் கலைஞனாகப் பார்த்தனர். இதன் வெளிப்பாடாக இறைவனை இசை யின் இருப்பிடம் காப்பிடம் என்று பல இடங் களிலும் தேவார வரிகள் நமக்குணர்த்தி நிற்கின்றன.

இது தவிர இந்த ஆய்வுக்கட்டுரை வாயி லாக இசைக்கலையினை மூன்று விதமாக இறைவனோடு தொடர்புபடுத்தி பக்தியுடன் நாயன்மார்கள் கையாண்டிருக்கின்றார்கள் என்பது அவர்களது தேவாரங்களிலே தெளி வாகக் காணமுடிகின்றது.

இறைவனையே இசையாக கண்டின் புறுவதாகவும், இசை பாடி இறைவனை வழி படுவதாகவும், இசைக்கருவிகள் இசைப்பது, பாடுவது இதன் வழி இறை வனைத்துதிப்பது என்கின்ற மூன்று வித மான வழிகளிலே இசைக் கலையினை நாயன்மார்கள் தேவாரங்களிலே தொடர்புபடுத்தியிருக்கின்றார்கள் என்பது இந்த ஆய்வு முயற்சியின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகின்றது.

மேலே ஒவ்வொரு திருமுறையிலும் இசை பற்றியும், இசைக்கருவிகள் பற்றியும்

நாயன்மார்களினால் கூறப்பட்டவற்றினைத் தொட்டுக்காட்டுவதாக மட்டுமே இக்கட்டுரை அமைந்திருக்கின்றது. திருமுறைகளிலே தரப்பட்டிருக்கும் அனைத்துக் குறிப்புக்களும் இதனுள் அடக்கப்படவில்லை, திருமுறைகளில் அடங்கும் நாயன்மார்கள் அனைவருக்குமான சில எடுத்துக்காட்டுக்களே இங்கு முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இத்தரவுகள் ஒவ்வொரு நாயன்மார்களது பாடல்களையும் தனித் தனியே ஆராயவும் மற்றும் ஒவ்வொரு திரு முறைகளையும் இசையியல் தளத்திலே ஆராய்ந்து விரிவாக நோக்குவதற்கான ஒரு அறிமுகத்தை தரவல்ல கட்டுரையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புக்கள்:**

1. சாம்பமூர்த்தி. பி., (1969), **கர்நாடக சங்கீதம் பாகம் 3**, ப. 97.
2. வடிவேல் . இ., (1988), **திருமுறைப் பண்ணிசைத்திறனாய்வு**, ப. 12 .
3. திருஞானசம்பந்தர் தேவாரம், 2.48 : 1.
4. மேலது, 3 , 3.73 பதிகம், 3.73.4, பண் சாதாரி.
5. திருநாவுக்கரசர் தேவாரம். 4.12.1 , பண் : பழந்தக்கராகம்.
6. மேலது, 4.19.10 ,பண் : சீகாமரம்.
7. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம்7.6.04 , பண் : இந்தளம்.
8. 11ம் திருமுறை: 1ம் பாசுரம்: 9,10 வது அடிகள்.
9. கபிலதேவர்: 11ம் திருமுறை: திருவிரட்டை மணிமாலை- கட்டளைக்கலித்துறை: 25 பாசுரம்.
10. மேலது, சிவபெருமான் திருவந்தாதி , பாசுரம்: 26.
11. பரணதேவர் : 11ம் திருமுறை : சிவபெருமான் திருவந்தாதி - 95 பாசுரம்.
12. திருஞானசம்பந்தர் தேவாரம் 1.75.11 , பண் குறிஞ்சி.
13. வடிவேல். இ., (1988), **திருமுறைப் பண்ணிசைத்திறனாய்வு** , ப.48.
14. திருஞானசம்பந்தர் தேவாரம், 2.6.4 .
15. திருநாவுக்கரசர் தேவாரம், 4.23.5 , பண்: கொல்லி.
16. மேலது, 5.18.4 .
17. மேலது, 4.1.6 , பண்: கொல்லி.
18. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், 7.11.2 ,பண் :இந்தளம்.
19. மேலது, 7.24.5 ,பண் நட்டபாடை.
20. மேலது, 7.29.6, திருக்குருகாவூர் : பண் :நட்டராகம் .
21. திருமளிகைத்தேவர் : 9ம் திருமுறை : திருவிசைப்பா : கோயில்-உயர்கொடியாடை.
22. சேரமான் பெருமாள் : 11ம் திருமுறை : திருக்கைலாய ஞான உலா- 28அடி.
23. மேலது, அடி 36-37 .
24. திருஞானசம்பந்தர் தேவாரம் 2.85.1 , பண் பியந்தைக்காந்தாரம்.
25. மேலது, 2.94.6 , பண் பியந்தைக்காந்தாரம்.

26. மேலது, 1.39.1, பண் : தக்கராகம்.
27. மேலது, 1.70.2 , பண் : தக்கராகம்.
28. மேலது, 1.44.5, பண் :தக்கராகம்.
29. மேலது, 4.66.9 .
30. மேலது, 5.7.1 .
31. கருவூர்த்தேவநாயனார் : 9 ம் திருமுறை திருவிசைப்பா.
32. மேலது, 9ம் திருமுறை : திருவிசைப்பா: திருக்கீக்கோட்டுர் மணியம்பலம்.
33. சேந்தனார்: 9ம் திருமுறை : திருப்பல்லாண்டு.
34. மேலது, 9ம் திருமுறை : திருப்பல்லாண்டு.
35. காரைக்காலம்மையார் : 11ம் திருமுறை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பா. 10).
36. மேலது,பா. 11.
37. மேலது,பா. 11.
38. மேலது, பா. 13).
39. மேலது, பா. 18.
40. மேலது,பா. 21.
41. சேரமான் பெருமாள் நாயனார் :11ம் திருமுறை : திருவிரட்டை மணிமாலை: அடி 47 - 53
42. நக்கீரதேவ நாயனார் : 11ம் திருமுறை : திருஈங்கோய்மலை எழுபது : பா. 22.
43. சேக்கிழார் பெருமான் , **திருப்புராணம்** : திருமலைச்சருக்கம் பா. 1.1.4.
44. திருமூலர் , **திருமந்திரம்,** பா. 382 .
45. மேலது, பா. 609.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

தத்துவவியல்


18. திருஞானசம்பந்தர் திருப்பாடல்களில் வெளிப்படும் முத்தி பற்றிய சிந்தனைகள் 155
*வி.எழில்நிலா, மா.அகல்யா*

19. சிவாகமங்களும் அஷ்டப்பிரகரண சைவசித்தாந்த நூல்களும் ஓர் அறிமுகம் 161
*இ. கலைவாணி*

20. சிவஞான முனிவர் நோக்கில் சர்வஞ்ஞானோத்தர ஆகமம் 172
*பொ.சந்திரசேகரம்*

21. திருமந்திரம் காட்டும் முப்பொருள் உண்மையும் தமிழர் மெய்யியலில் அதன் செல்வாக்கும் 185
*ந.சிவகரன், த.தவனிசன்*

22. சேந்தனார் பாடல்களில் சைவசித்தாந்த கோட்பாடுகள் 192
*சி. ஞானசூரியம்*

23. ஐயடிகள் காடவர்கோனின் க்ஷேத்திர வெண்பாவில் வெளிப்படும் மனித அகவியல்பு நிலைகள் 203
*ந.சுபராஜ், க.கணேசராஜா*

24. தேவாரத் தூதுப்பாடல்கள் புலப்படுத்தும் இறையான்ம உறவு 211
*தி.செல்வமனோகரன்*

25. திருஞானசம்பந்தர் பாடல்கள் புலப்படுத்தும் பதி பற்றிய சிந்தனைகள் 222
*கு.தவசீலன்*

26. திருமூலரும் தாந்திரீக மெய்யியலும் ஓர் ஆய்வு 234
*ச.முகுந்தன்*

27. திருமுறைகளில் அர்த்தநாரீஸ்வரர் தத்துவம் 243
*க. யாழினி*

28. மணிவாசகர் பாடல்களில் உளவியல் செல்வாக்கு ஓர் நோக்கு 253
*ச. ஹேமபிநாத்*

29. The Dialectic of 'the One and the Many' in Śuddhādvaita and its Implications 266
Rev.Fr. Nicholapillai Maria Saveri


கலையியல்


30. திருமுறைகள் சுட்டும் இசைக்குறிப்புக்கள் - சமய இசையியல் ஆய்வு 277
*அ.சுகன்யா*

31. பெரியபுராணம் சித்தரிக்கும் நுண்கலைகள் 287
*க.சத்தியப்பிரியா*

32. சிவாகமக்கிரியைகளில் நடனக்கலையின் வகிபாகம் 298
*பி. சீதாலக்ஷ்மி*

33. சிவாகமங்களில் கிராமநிர்மாணமும் கட்டடக் கலையும் 308
*ப. சிவானந்தசர்மா*

34. சைவக்கோயிற் கட்டடக்கலையில் கர்ப்பக்கிருகம் - சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டது 317
*சி.சுகந்தினி*